முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**ஆரம்பப் பரீட்சை – 2012 ஜனவரி**

# (53) வணிகக் கல்வி
(Business Studies)

22-01-2012
பிற்பகல்
[2.00 – 4.00]

**நேரம்: மூன்று (02) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 07
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

*(1)* *இவ்வினாத்தாள் **A, B, எனும் இரண்டு (02)** பகுதிகளைக் கொண்டது.*

*(2)* ***கீழே குறிப்பிட்டவாறு ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.***

- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 இற்கும்***
- ***பகுதி B யிலிருந்து ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கும்***

*(3)* ***விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே மொழி மூலம் ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

*(4)* *மொத்தம் 100 புள்ளிகள்.*

---

## பகுதி - A

பல்’தேர்வு வினாக்கள்
இந்தப் பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்.
40 புள்ளிகள்

01. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் **மிகவும் சரியான விடையைத்** தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் பதில்களிலிருந்து தெரிவுசெய்து உமது விடைப் புத்தகத்தில் வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) தனியுரிமை வியாபாரத்துடன் ஒப்பிடும்போது பங்குடைமை வியாபாரம் ஒன்றின் விசேட நன்மையை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.

(1) விரைவு தீர்மானமெடுத்தல் (Quick decision making)
(2) வரையறுக்கப்படாத பொறுப்புகள் (Unlimited liability)
(3) சட்டரீதியான தனித்துவ ஏற்பிசைவில்லாமை (No legal personality)
(4) இடர் பரம்பல் (Distribution of risk)

(B) பின்வருவனவற்றுள் வர்த்தக சேவை (commercial service) **அல்லாதது** எது ?

(1) வியாபாரத்தை விரிவாக்குவதற்கு கடன் வசதியை வழங்குதல்
(2) பண்டசாலைக்குப் (warehouse) பொறுப்பாக பாதுகாப்பு அதிகாரி ஒருவரை ஆட்சேர்த்தல்
(3) ஆயுட் காப்புறுதித் திட்டமொன்றைப் பெறல்
(4) ஆடைத்தொழிற்சாலைக்காக வைத்திய அதிகாரி ஒருவரை ஆட்டீசர்ப்புச் செய்தல்

(C) தனியார் கம்பனி தொடர்பில் பின்வருவனவற்றுள் எது **பிழையானது** ?

(1) ஆகக்கூடிய எண்ணிக்கையாக ஐம்பது (50) பங்குடைமையாளர்களைக் கொண்டிருக்க முடியும்.
(2) ஆகக்குறைந்தது ஒரு பணிப்பாளராவது இருத்தல் வேண்டும்.
(3) பணிப்பாளர்களின் ஆகக்கூடிய வயதெல்லை 60 ஆகும்.
(4) எல்லாப் பங்குடைமையாளர்களும் எழுத்து மூலம் உடன்படின் ஆண்டுதோறும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடத்த வேண்டிய அவசியமில்லை.

(D) பின்வருவனவற்றிலிருந்து சட்டபூர்வ தனித்துவ ஏற்பிசைவு (legal personality) இல்லாத வர்த்தக நிறுவனத்தை இனங்காண்க.

(1) மட்டுப்படுத்தப்பட்ட தனியார் கம்பனி

(2) பொதுத்துறை கூட்டுத்தாபனங்கள் (Public Corporation)

(3) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி (Public Liability Company)

(4) தனியுடைமை (Sole Proprietorship)

(E) 1890 இன் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு *24* தொடர்பாக பின்வருவனவற்றுள் பிழையானது எது ?

(1) பங்குதாரர்கள் மூலதனத்திற்குச் சமமாகப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(2) பங்குதாரர்கள் தாம் வழங்குகின்ற சேவைகளுக்காக ஒரு சம்பளத்திற்கு அல்லது கொடுப்பனவுப் படி ஒன்றுக்கு (allowance) உரித்துடையவராவார்.

(3) பங்குதாரர் ஒருவர் தனது மூலதனப் பங்களிப்புக்கு மேலதிகமாக கடன் ஒன்றை பங்குடைமைக்கு வழங்கும்போது ஆகக் குறைந்தது ஆண்டொன்றுக்கு 5% மான ஒரு வட்டியைப் பெற உரிமையுண்டு.

(4) எல்லாப் பங்குதாரர்களுக்கும் எந்த நேரத்திலும் பங்குடைமையின் கணக்கேடுகளை சரிபார்த்திடக் கூடியதாக வைக்கப்படல்.

(F) பின்வருவனவற்றுள் எது "பிராந்திய பொருளியில் கூட்டுறவு" என்பதின் ஒரு உதாரணமாகும் ?

(1) உலக வர்த்தக அமைப்பு

(2) ஐரோப்பிய ஒன்றியம்

(3) சர்வதேச நிதி நிறுவனம்

(4) உலக வங்கி

(G) பின்வருவனவற்றிலிருந்து அனுமதி பெற்ற ஒரு விசேடத்துவ வங்கியைத் தெரிவுசெய்க.

(1) தேசிய சேமிப்பு வங்கி

(2) இலங்கை வங்கி

(3) மக்கள் வங்கி

(4) DFCC வர்த்தன வங்கி

(H) கடனிறுக்கும் ஆற்றல் தரமிடல் (credit rating) தொடர்பில் **பிழையானது** பின்வருவனவற்றுள் எது ?

(1) கம்பனி ஒன்றினால் அல்லது அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட முறிகளை வாங்கும்போது முதலீட்டாளர்கள் எடுக்கின்ற நட்ட இடர் (risk) பற்றி அவர்களுக்கு ஒரு அபிப்பிராயத்தைத் தருகிறது.

(2) கடன் வாங்குவோரால் பெறப்பட்ட கடன் ஒன்றின் மீது மீளச் செலுத்தல் தவறுதல் (defaulting) நிகழவிருப்பதை இது குறித்துக் காட்டுகிறது.

(3) இது முறிகள் முதலான கடன் பிணைகளின் (debt securities) எதிர்கால முதலீட்டாளர்களுக்கான (Potential Investors) ஒரு நிதிசார் குறிகாட்டி

(4) வரி நிவாரணத்தைப் பெற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒரு நிதிசார் ஆவணம் (financial document) இதுவாகும்.

(I) காசோலை ஒன்றைக் கையாளும்போது ஒரு வங்கியின் கடமையானது பின்வருவனவற்றுள் எதன் அறிவுறுத்தலை மேற்கொள்ள வேண்டும் ?

(1) பெறுவோர் (Payee)
(2) வரையுநர் (Drawer)
(3) பெயரிடப்பட்ட பெறுநர் (Drawee)
(4) முகாமையாளர் (Manager)

(J) பின்வருவனவற்றுள் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணி **அல்லாத** ஒன்று எது ?

(1) இலங்கை உற்பத்திகளின் ஏற்றுமதி வினையாற்றுகை (performance) இன் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திற்கான ஏற்றுமதி சந்தைப்படுத்தல் உதவியை வழங்குதல்
(2) ஏற்றுமதி விலைப்பட்டியல்கள் தீர்க்கப்படாமை (non-settlement of export invoices) மீது ஏற்றுமதியாளர்களுக்கான காப்புறுதி வழங்குதல்
(3) ஏற்றுமதியாளர்களுக்காக தேவையான அறிவுரை மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
(4) சர்வதேச சந்தைகளைக் கண்டறிவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கான e-வணிகத் தீர்வுகளை (e-business solutions) வழங்குதல்

(K) பின்வருவனவற்றுள் காப்புறுதி செய்ய முடியாத இடர் (non insurable risk) எது ?

(1) வாடிக்கையாளரால் செலுத்தப்படாத கடன்கள்
(2) ஊழியர்களின் திருட்டுக்கள் காரணமாக நட்டங்கள்
(3) பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக நட்டங்கள்
(4) நாகரிகத்தில் ஏற்படும் மாற்றம் காரணமாக (due to change in fashion) விற்கப்படாத இருப்பின் மீதான நட்டங்கள்

(L) "கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை ஒன்றில் ஒருவருக்கூடாக மற்றவர் நேர்மையாகச் செயற்படவும் ஒருவரையொருவர் தவறாக வழிநடத்தாமல் இருக்கவும் அல்லது சிக்கலான தகவல்களைப் பெறாமல் இருக்கவும் வாங்குவோன், விற்போன் ஆகிய இருவருக்கிடையே ஒரு ஆகக்குறைந்த தரம் தேவைப்படுகிறது" இதனைக் குறித்து நிற்பது,

(1) கடன் பற்றுரிமை மாற்றியிடல் (Subrogation)
(2) அண்மிய காரணம் (Proximate-cause)
(3) பங்களிப்புத் தொகை (Contribution)
(4) மீயுயர் நம்பிக்கை (Utmost good faith)

(M) அலகு நம்பிக்கைப் பொறுப்பலகுகள் (unit trusts) தொடர்பில் **பிழையானது** பின்வருவனவற்றுள் எது ?

(1) பொதுமக்களுக்கு அதன் அலகுகளை விற்பதனால் வளங்களை முன்னேற்றுகின்ற முதலீட்டு நிதியங்களின் தொகுப்பே ஒரு நம்பிக்கை அலகுப் பொறுப்பு ஆகும்.

(2) அலகு நம்பிக்கைகள் பங்குகள் பரிமாற்று நிறுவனம் ஊடாக நிதியங்களை முதலீடு செய்கின்றன.

(3) தனது சொந்தப் பங்குகளை மீளக்கொள்வனவு செய்திட அலகு நம்பிக்கை நிறுவனங்களுக்கு உரிமை உண்டு.

(4) தனது சொந்தப் பங்குகளை மீளக்கொள்வனவு செய்திட அலகு நம்பிக்கை நிறுவனங்களுக்கு உரிமை கிடையாது.

(N) கேள்வி வைப்புகள் (Demand deposits) பின்வருவனவற்றில் எதனால் பேணப்பட முடியும் ?

(1) அனுமதிப்பத்திரம் பெற்ற சிறப்புத் தேர்ச்சி வங்கிகள் (Licensed specialised banks)

(2) அனுமதி பெற்ற வணிக வங்கிகள் (Licensed Commercial banks)

(3) இலங்கை மத்திய வங்கி

(4) மேலேயுள்ள எல்லா வங்கிகளும்.

(O) மூலதனச் சந்தைச் சாதனங்களை (market instruments) மட்டும் உள்ளடக்கிய குழு பின்வருவனவற்றுள் எது ?

(1) வாக்குறுதிச் சீட்டு (Promissory Notes), நம்பிக்கை அலகு (Unit Trusts), தொகுதிக் கடன்கள் (Debentures).

(2) திறைசேரி உண்டியல்கள் (Treasury Bills), வர்த்தகத் தாள்கள் (Commercial Papers), வாக்குறுதிச் சீட்டு (Promissory Notes).

(3) வர்த்தகத் தாள்கள (Commercial Papers), நம்பிக்கை அலகு (Unit Trusts), சாதாரண பங்குகள் (Ordinary Shares).

(4) தொகுதிக் கடன்கள் (Debentures), சாதாரண பங்குகள் (Ordinary Shares), நம்பிக்கை அலகுகள் (Unit Trusts).

(P) இலங்கைப் பிணை முறிகள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழுவின் (Securities & Exchange Commission of Sri Lanka) பிரதான நோக்கம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது ?

(1) முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல்

(2) தரகுக் கம்பனிகளுக்கு கடன் வசதிகளை வழங்குதல்

(3) வாண்மைத்தொழில்சார் நியமங்களைப் (professional standards) பேணுதல்

(4) முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கு இழப்பீட்டு நிதியம் ஒன்றை (compensation fund) செயற்படுத்துதல்

(Q) “விற்பனை நிபந்தனை (Term of sale) ஆனது ஒரு விற்பனையாளனால் குறிக்கப்பட்ட விலை (price invoiced) அல்லது கோரப்பட்ட விலை (quoted price) போய்ச்சேரும் துறைமுகம் எனப் பெயரிடப்பட்டது வரை காப்புறுதி மற்றும் ஏனைய எல்லாக் கட்டணங்களையும் குறிப்பிடுகிறது” என்பது அறியப்படுவது,

(1) Ex-ship விலை (2) CIF விலை

(3) FOB விலை (4) LOCO விலை

(R) காப்பு வினைத்திறன் வீதம் அளப்பது, (Effective rate of protection measures),

(1) இறக்குமதிகள் மீதான வரிக்கு முன் உள்நாட்டுப் பெறுமதிகள் சேர்க்கப்பட்டமை

(2) இறக்குமதிகள் மீதான வரிக்குப் பின்னர் உள்நாட்டுப் பெறுமதிகள் சேர்க்கப்பட்டமை

(3) இறக்குமதிகள் மீதான வரிக்குப் பின்னர் உள்நாட்டுப் பெறுமதி சேர்க்கையில் ஏற்படும் அதிகரிப்பு

(4) தாராள வர்த்தகத்தின் கீழ் உள்நாட்டுப் பெறுமதி சேர்ப்பு அதிகரித்தல்

(S) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின் அடிப்படையாகவுள்ள எடுகோள்களுள் விதிவிலக்காக உள்ள ஒன்று பின்வருவனவற்றுள் எது ?

(1) உற்பத்தியில் அரசாங்கத் தலையீடு இல்லை

(2) வியாபாரத் தடைகள் உள்ளமை (Availability of trade barriers)

(3) இரு நாடுகளும் மற்றும் இரண்டு வகையான பொருட்களும் மட்டுமே கவனத்தில் எடுக்கப்படும்.

(4) இரண்டு நாடுகளிலும் வள உரிமைத்துவம் (Ownership) நிலையானதாக அல்லது உறுதியானதாக இருக்கும்.

(T) சென்மதி நிலுவையில் (BOP) பொருட்களின் ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கும் இடையேயான ஒரு வித்தியாசத்தைக் குறிப்பது,

(1) வர்த்தக மீதி (Trade Balance) (2) வருமான மீதி (Income Balance)

(3) நடைமுறைக் கணக்கு மீதி (4) ஒட்டுமொத்தமீதி (Overall Balance)

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

## பகுதி - B

இப்பகுதியிலிருந்து ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
60 புள்ளிகள்

**02.** (a) இலங்கையில் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக உள்ள வசதிகள் எவை ? (05 புள்ளிகள்)

(b) பங்குடைமை ஒன்றில் பங்குதாரர்களின் கடமைகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(c) ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியின் (Private Limited Liability Company) பண்புகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (a) குறுக்குக் கோடிட்ட காசோலை (crossed cheque) என்பதன் கருத்தை விளக்குக. மூன்று வகையான குறுக்குக் கோடிடப்படலுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக. (05 புள்ளிகள்)

(b) குறுக்குக் கோடிடாத காசோலை (open cheque) குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை (crossed cheque) ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக. (05 புள்ளிகள்)

(c) இலங்கையில் நடைமுறையிலுள்ள படிமக் காசோலையைத் தீர்வு செய்யும் முறையை (image cheque clearing method) சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**04.** (a) பின்வரும் காப்புறுதிக் கோட்பாடுகள் (principles of Insurance) மூன்றினைப் (03) பற்றி சுருக்கமாக விளக்குக.

(i) நட்ட உத்தரவாதம் (Indemnity)

(ii) மீயுயர் நம்பிக்கை (Utmost Good Faith)

(iii) காப்புறுதி செய்யத்தகு அக்கறை (Insurable Interest) (06 புள்ளிகள்)

(b) ஆயுள் காப்புறுதி ஒன்றின் நன்மைகள் நான்கினைப் (04) பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(c) இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் (SLECIC) பிரதான பணிகள் எவை ? (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**05.** (a) சர்வதேச வர்த்தகம் தொடர்பாக வார்நாமத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக. வார்நாமத்தில் உள்ளடங்குகின்ற நான்கு (04) அம்சங்களைப் பட்டியலிடுக. (06 புள்ளிகள்)

(b) உலக வர்த்தக அமைப்பின் (WTO) பிரதான பணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(c) பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் உருவாக்கத்திற்காக பங்களிப்புச் செய்த காரணிகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**06.** (a) உலகமயமாக்கலின் நன்மைகள், தீமைகளை ஒப்பிட்டு சாதக, பாதக கருத்துக்களை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

(b) சென்மதி நிலுவைப் பற்றாக்குறைக்கான மாற்று வழிகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(c) இலங்கை ரூபாவின் 3% இனாலான பெறுமதி இறக்கத்தின் பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**07.** பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(a) பிரதான பங்குதாரர் (Principal Partner)

(b) அமைப்பு அகவிதிகள் (Articles of Association)

(c) நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி (Unit Trust)

(d) கடன் மீள்செலுத்தும் இயல்பு மதிப்பீடு (Credit Ratings)

(e) இலங்கை வணிக கழகம் (Sri Lanka Chamber of Commerce)

(ஒவ்வொன்றுக்கும் 03 புள்ளிகள் வீதம், மொத்தம் 15 புள்ளிகள்)

- o0o -